தமிழ் முரசு
2 | சிங்கப்பூர் | வியாழன் 14 6 2018

# நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் உணவுப் பொருட்கள் நன்கொடை



பிரதமர் அலுவலக அமைச்சரும் கல்வி, நிதி, சட்ட இரண்டாம் அமைச்சருமான இந்திராணி ராஜா (நடுவில்) உணவுப் பொருட்களைப் பயனாளர் ஒருவரிடம் வழங்கினார். ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் தலைவர் முனைவர் மு. அ. காதர் (இடது) உடன் உள்ளார். **படம்: ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம்**

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), சென்ற ஞாயிற்றுக்கிழமை அன்று நோன்பு திறப்பு நல்லிணக்க நிகழ்ச்சியைப் பென்கூலன் பள்ளிவாசலில் நடத்தியது. இதன் ஒரு பகுதியாக, இச்சங்கம் 10 குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களை நன்கொடையாக வழங்கியது. இந்நிகழ்ச்சியில் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த சமூகத் தலைவர்கள், மாணவர்கள், சங்க உறுப்பினர்கள் உட்பட சுமார் 250 பேர் கலந்து கொண்டனர்.